Australian Government
Department of Health

Coronavirus disease (COVID-19)

# முதியோர் இல்லப் பராமரிப்புச் சேவைகளில் வசிப்பவர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான தகவல்கள்

கொரோனா வைரஸ் நோய்-19 (COVID-19) தொற்றுவதற்கான அபாயமும், மற்றும் இதன் விளைவாகக் கடுமையான நோய் ஏற்படுவதற்கான அபாயமும் முதியவர்களுக்கு அதிகம் உள்ளது. மிக எளிதில் பாதிக்கக்கூடிய நமது சமுதாய அங்கத்தினர்களைப் பாதுகாக்க, மேலாளர்கள், ஊழியர்கள், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

முதியோர்களைப் பாதுகாப்பதற்காக, முதியோர் பராமரிப்பகங்களுக்கு வருகை தருவோருக்குப் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். ஊழியர்கள், பார்வையாளர்கள் மற்றும் வருகைதரும் தொழிலாளர்கள் போன்றோர், தமக்கு கொரோனா வைரஸ் நோய்-19 (COVID-19) இருந்தால், முதியோர் பராமரிப்புச் சேவைகளிலிருந்து விலகி இருப்பதை உறுதிசெய்வது கொள்வது முக்கியமாகும். அவர்கள் தங்கள் சொந்த ஆரோக்கியத்தை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். அத்துடன் ஒரு சேவை நிலையத்திற்குள் நுழைவதற்கு முன்பு, அவர்களின் ஆரோக்கியம் குறித்த விவரங்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

## குடியிருப்பாளர்கள்

சமுதாயத்தின் அனைத்து அங்கத்தினர்களையும் போலவே, முதியோர் பராமரிப்பு சேவைகளில் வாழும் மக்களும் தங்கள் சொந்த ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நல்ல சுகாதாரம் மற்றும் சமூக விலகியிருத்தலைப் பேணுதல் போன்றவற்றைக் கடைப்பிடிப்பதைத் தவிர, முதியோர் பராமரிப்பகங்ளுக்கு வருகை தருதலில் கட்டுப்பாடுகள் இருக்கும். பெரிய குழு வருகைகள், கூட்டங்கள் மற்றும் வெளிப்புறச் சுற்றுலாக்கள் போன்றவை ஒத்திவைக்கப்படும். தொலைபேசி மற்றும் காணொளி (வீடியோ) அழைப்புகள் மூலம் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் தொடர்ந்து இணைந்திருக்க குடியிருப்பாளர்களுக்கு ஆதரவளிக்கப்படும்.

நீங்கள் கொரோனா வைரஸ் நோய்-19 (COVID-19) இன் அறிகுறிகளைக் கொண்டிருந்தால், நீங்கள் மற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து தனிமைப்படுத்தி வைக்கப்படுவீர்கள். அத்துடன் பார்வையாளர்களையும் பார்க்க முடியாது. நீங்கள் தனிமைப்படுத்தப்படுகையில், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் குடியிருப்புப் பராமரிப்பு தொழிலாளர்கள் தொடர்ந்து ஆதரவையும் பராமரிப்பையும் உங்களுக்கு வழங்குவார்கள். மருத்துவ பராமரிப்பு போன்றவைகளுக்காக நீங்கள் உங்கள் அறையை விட்டு வெளியேற வேண்டியிருந்தால், அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும்

முகமூடியை நீங்கள் அணிய வேண்டும்; இது சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களால் வழங்கப்படும். எந்தவொரு ஆரோக்கியமான குடியிருப்பாளரும் முகமூடி அணிய வேண்டியதில்லை.

## பார்வையாளர்கள்

வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தவர்கள் அல்லது கடந்த 14 நாட்களில் கொரோனா வைரஸ் நோய்-19 (COVID-19) இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட ஒருவருடன் தொடர்பு கொண்ட பார்வையாளர்கள், ஒரு முதியோர் பராமரிப்பகத்துக்கு வருகைதர முடியாது. காய்ச்சல் மற்றும் சுவாசக்கோளாறு நோயின் அறிகுறிகள் கொண்ட எவரும், அல்லது குளிர்ஜுரத்துக்குத் (இன்ஃபுளுவென்சா) தடுப்பூசி போடாத எவரும் பார்வையிட முடியாது.

மே 1 முதல், ஒரு முதியோர் பராமரிப்பகத்தைப் பார்வையிட வேண்டுமானால், நீங்கள் இன்ஃபுளுவென்சா தடுப்பூசியைப் போட்டிருக்கவேண்டும்.

பார்வையாளர் வருகைகள் குறுகியதாக இருக்க வேண்டும். மேலும், குடியிருப்பாளரின் அறையில், வெளியே அல்லது ஒரு குறிப்பிட்ட நியமிக்கப்பட்ட பகுதியில் (பொது இடம் அல்லாத பகுதியில்) நடத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு குடியிருப்பாளரைக் காண ஒரு நேரத்தில், மருத்துவர் உட்பட இரண்டுக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் வருகைதரக்கூடாது. மேலும், 16 வயது மற்றும் அதற்கு கீழ்ப்பட்ட குழந்தைகளின் வருகையானது, சிறப்புச் சூழ்நிலைகள் தவிர, ஏனைய சமயத்தில் அனுமதிக்கப்படாது.

அனைத்துப் பார்வையாளர்களும் ஒரு குடியிருப்பாளரின் அறைக்குள் நுழைவதற்கு முன்னும், அறையிலிருந்து வெளியேறிய பின்னும் கைகளைக் கழுவ வேண்டும்; மேலும், அவர்கள் உடல்நலமின்றி இருக்கும்போது விலகி இருப்பது உட்பட, சமூக விலகியிருத்தலைப் பேணுதலைக் கடைப்பிடிக்க ஊக்குவிக்கப்படுவார்கள்.

## மேலாளர்கள் மற்றும் ஊழியர்கள்

கொரோனா வைரஸ் நோய்-19 (COVID-19) -ல் இருந்து குடியிருப்பாளர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க, முதியோர் பராமரிப்பு வசதிகள் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. ஊழியர்களின் உடல்நலம் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படும்; புதிய மற்றும் திரும்பி வரும் குடியிருப்பாளர்கள், நுழைவதற்கு முன்னர் பரிசோதனை செய்யப்படுவார்கள். அத்துடன் குடியிருப்பாளர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை விளக்க சுவரொட்டிப் படச்செய்திகள் மற்றும் பிற தகவல்தொடர்புகள் பயன்படுத்தப்படும்.

முதியோர் பராமரிப்பு வழங்குநர்களுக்கு அதிகமான தொழிலாளர்களைக் கிடைக்கச் செய்வதற்காக, முதியோர் பராமரிப்பு வசதிகள் மற்றும் வீட்டுப் பராமரிப்புச் சேவை வழங்குநர்களுக்கான சர்வதேச மாணவர் விசா வேலை நிபந்தனைகளை அரசாங்கம் தளர்த்தியுள்ளது. சர்வதேச மாணவச் செவிலியர் மற்றும் பிற முதியோர் பராமரிப்புத் தொழிலாளர்கள், இரண்டு வாரத்தில் 40 மணி நேரத்திற்கும் மேல் வேலை செய்ய இது

அனுமதிக்கும். ஆஸ்திரேலியாவில் தற்போது சுமார் 20,000 சர்வதேச மாணவச் செவிலியர் கல்வி பயில்கின்றனர்.

## கொரோனா வைரஸின் பரவலைத் தடுக்க நம்மால் எவ்வாறு உதவ முடியும்?

நல்லமுறையில் கை மற்றும் தும்மல் / இருமல் சுகாதாரத்தைக் கடைப்பிடிப்பதே பெரும்பாலான வைரஸ் கிருமிகளுக்கு எதிரான சிறந்த பாதுகாப்பாகும். நீங்கள் செய்ய வேண்டியவை:

- சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும், மற்றும் கழிப்பறைக்குச் சென்று வந்த பிறகும், சோப் மற்றும் தண்ணீர் கொண்டு அடிக்கடி கைகளைக் கழுவவும்
- உங்கள் இருமல் மற்றும் தும்மலை மூடியவாறு செய்யவும்; திசுக்களை அப்புறப்படுத்தவும்; கைகளைக் கழுவவும், அத்துடன்
- மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும் (முடிந்தவரை, மற்றவரிடமிருந்து 1.5 மீட்டருக்கு மேல் விலகி இருக்கவும்).

## மேலதிகத் தகவல்கள்

கொரோனா வைரஸ் கவலைக்குரியது என்றாலும், காய்ச்சல், இருமல், தொண்டைப் புண் அல்லது சோர்வு போன்ற நோயறிகுறிகளைக் காண்பிக்கும் பெரும்பாலான மக்கள், ஜலதோஷம் அல்லது பிற சுவாசக்கோளாறு நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடும் – கொரோனா வைரஸ் நோய்-19 (COVID-19) அல்ல - என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.

சமீபத்திய ஆலோசனை, தகவல்கள் மற்றும் வள ஆதாரங்களுக்குப் பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: www.health.gov.au

தேசிய கொரோனா வைரஸ் உதவி இணைப்பை 1800 020 080 என்ற எண்ணில் அழைக்கவும். இது ஒரு நாளைக்கு 24 மணிநேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் இயங்குகிறது. உங்களுக்கு மொழிபெயர்ப்பு அல்லது மொழிபெயர்ந்துரைப்புச் சேவைகள் தேவைப்பட்டால், 131 450 என்ற எண்ணில் அழைக்கவும்.

உங்கள் மாநில அல்லது பிரதேச பொதுச் சுகாதார நிறுவனத்தின் தொலைபேசி எண் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும்: www.health.gov.au/state-territory-contacts

உங்கள் உடல்நலம் குறித்து உங்களுக்குக் கவலைகள் ஏதும் இருந்தால், உங்கள் மருத்துவரிடம் பேசவும்.